# பத்திரிக்கைச் செய்தி

## இலங்கை அகதிகளுக்கு வழங்கப்பட்ட நிதியை தவறாக பயன்படுத்தி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியதற்காக மண்டல துணை தாசில்தார்கள் உட்பட 4 பேர்களுக்கு 2 வருட கடுங்காவல் தண்டனையும், ரூ.30,000 அபராதமும் விதித்து தீர்ப்பு

கடந்த 2000ம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் இலங்கை அகதிகளுக்கு அரசால் வழங்கப்பட்ட நிதியை தவறாக கையாண்டு அரசுக்கு ரூ.42,80,500/- வருவாய் இழப்பு ஏற்படுத்திய குற்றத்திற்காக அப்போது பணியிலிருந்த திரு.தெய்வசிகாமணி, தாசில்தார், திரு.செல்லப்பன், திரு.ராஜகோபாலன், மண்டல துணை தாசில்தார், திரு.பார்த்தசாரதி, முன்னாள் வருவாய் ஆய்வாளர், திரு.ராமச்சந்திரன், முன்னாள் மண்டல துணை தாசில்தார், திரு.அண்ணாதுரை, முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திருமதி.செண்பகவல்லி ஆகியோர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம் பிரிவில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் விசாரணை முடிவுற்று எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, செங்கல்பட்டு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டது. இன்று 11.12.2023 இவ்வழக்கின் எதிரிகள் திரு.ராஜகோபாலன், மண்டல துணை தாசில்தார், திரு.பார்த்தசாரதி, முன்னாள் வருவாய் ஆய்வாளர், திரு.ராமச்சந்திரன், முன்னாள் மண்டல துணை தாசில்தார், திரு.அண்ணாதுரை, முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களுக்கு சட்டப்பிரிவு 7of PC Act-ன் 1988 மற்றும் சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 2 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.30,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் திரு.தெய்வசிகாமணி, தாசில்தார், திரு.செல்லப்பன், மற்றும் திருமதி.செண்பகவல்லி ஆகியோர்கள் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் காலமாகிவிட்டனர்.